# IN THE COURT OF II ADDITIONAL DISTRICT AND SESSIONS JUDGE, THANJAVUR

## DEPOSITION OF WITNESS

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Case No | : | SC. 301/2022 | Village | : | |
| Prosecution witness | : | PW-16 | Taluk | : | |
| Name | : | திருமதி. சரோஜினி | Occupation | : | |
| Father Name | : | திரு. கணேசன் | Age | : | |

**Solemnly affirmed in accordance with the provisions of Act of 1873 of the day of 21.8.2025**

Both accused absent. U/sec.355 BNSS petition filed and allowed.

அரசு தரப்பில் முதல் விசாரணை:

நான் தற்போது கும்பகோணம் தாலுக்கா காவல்நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 2022 ஆம் வருடம் கபிஸ்தலம் காவல்நிலையத்தில் தலைமை காவலராக பணியிலிருந்தபோது காவல் ஆய்வாளர் அவர்களின் உத்தரவுப்படி கபிஸ்தலம் காவல்நிலைய கு.எண் 200/2021 சபி. 294 பி, 302 இதச வில் தடய பொருட்களான ரத்தம் தோய்ந்த மண் மற்றும் ரத்தம் தோயாத மண் இவைகளை பாபநாசம் உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றத்தில் 17.6.2022 ஆம் தேதி ஒப்படைத்து சிபி 61/22 பெற்றேன். மேலும் அதே தேதியில் இவ்வழக்கில் இறந்துபோன உடலிருந்து கைபற்றபட்ட ஊதா கருப்பு மற்றும் வெள்ளை நிறம் கலந்த கோடு போட்ட கைலி ஒன்றை ஒப்படைத்து சிபி எண் 60/22 பெற்றேன். மேலும் அதே தேதியில் எதிரி அணிந்திருந்த ப்ரவுன் கலர் வெள்ளை நிற கட்டம்போட்ட இரத்தம் தோய்ந்த கைலி ஒன்றை ஒப்படைத்து சிபி எண் 59/22 பெற்றேன். மேலும் அதே தேதியில் இவ்வழக்கில் எதிரி பயன்படுத்திய அரிவாள் ஒன்றை ஒப்படைத்து சிபி எண் 62/22 பெற்றேன். ஆய்வாளர் அவர்கள் 21.7.2022 ஆம் தேதி இவ்வழக்கு சம்மந்தமாக விசாரிக்க நடந்த விபரம் சொன்னேன்.

எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை

எதிரி பயன்படுத்திய அரிவாள் என்று எதிரி அணிந்திருந்த ப்ரவுன் கலர் வெள்ளை நிற கட்டம்போட்ட இரத்தம் தோய்ந்த கைலி என்று நான் பார்த்தது போல் உண்மைக்கு மாறாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. ஆய்வாளர் சொன்னதன் அடிப்படையில் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

நான் சொல்ல என் உத்திரவுப்படி
தட்டச்சிடப்பட்டு, என் முன்னிலையிலும்,
மேற்பார்வையிலும், சாட்சிக்குப் படித்துக்
காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரியென்று
ஒப்புக்கொள்ளப்பட்டது.

(ஒம்/- ப ,நாகராஜன்)
2வது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,
தஞ்சாவூர்.